# வழிகாட்டி

"நற்காரியத்திற்கும் இறையச்சத்துக்கும் உதவியாக இருங்கள்
பாவத்துக்கும் பகைமைக்கும் உதவியாக இருக்காதீர்கள்" (அல்குர்ஆன் 5:2)

இதழ் : 09 முஹர்ரம் 1433 டிசம்பர், 2011

## ஒழுக்கம் ~ உயர்வு ~ சுவர்க்கம்

இஸ்லாம் ஒழுக்கம், பண்பாடு ஆகியவற்றுக்கு உயர்ந்த முக்கியத்துவம் வழங்கியிருக்கிறது. ஒழுக்க விடயத்தில் அதலபாதாளத்தில் கிடந்த சமூகத்தை அல்லாஹ்வின் இறுதித் தூதர் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் இஸ்லாம் என்ற ஒப்பற்ற வாழ்க்கை நெறியின் மூலம் உயர்ந்த ஒழுக்க சீலர்களாகவும் பண்பாட்டில் சிகரத்தை தொட்டவர்களாகவும் மாற்றியமைத்தார்கள்.

அதே இஸ்லாத்தை பின்பற்றும் சமூகத்தில் இன்று ஒழுக்கச் சீர்கேடுகள் தலைதூக்கி, விபசாரம், தவறான ஆண்-பெண் தொடர்புகள் ஆகியன அதிகரித்துக் காணப்படுகின்றன. இவற்றை இஸ்லாம் பெரும் பாவங்கள் என அடையாளப்படுத்தியிருப்பதை அறிந்திருந்தும் பலர் நாளைய மறுமையை மறந்து, அல்லாஹ்வின் விசாரணையை மறந்து, தாங்க முடியாத நரக வேதனையை மறந்து மானக்கேடான விடயங்களில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றனர்.

ஒழுக்கக்கேடான விடயங்கள் நடைபெறக்கூடாது என்பதற்காக இஸ்லாம் பல முன்னேற்பாடுகளைச் செய்துள்ளது. அவற்றுள் முதலாவதாக, ஒவ்வொரு முஸ்லிமான ஆணும் பெண்ணும் தமது பார்வைகளைத் தாழ்த்திக்கொள்ளுமாறு கட்டளையிடுகிறது. பார்வைகளைத் தாழ்த்தாமல் இருப்பதுதான் தவறான ஆண்-பெண் தொடர்புகளுக்கும் விபசாரத்திற்கும் முதற் படியாகும். அல்லாஹ் கூறுகிறான்: 'நபியே மு..மினான ஆண்களுக்கு நீங்கள் கூறுங்கள்: அவர்கள் தங்களது பார்வைகளைத் தாழ்த்திக்கொள்ளவும். தங்களது மறைவான இடங்களையும் பாதுகாத்துக்கொள்ளவும் ... மேலும் நபியே மு..மினான பெண்களுக்கு கூறுங்கள்: தங்களது பார்வைகளை அவர்கள் தாழ்த்திக்கொள்ளவும். தங்களது மறைவான இடங்களையும் பாதுகாத்துக் கொள்ளவும். வெளியில் தெரியக் கூடியவற்றைத் தவிர தங்கள் (அலங்காரத்தை) அவர்கள் வெளிப்படுத்த வேண்டாம்' (24 : 30, 31) பார்க்கக்கூடாதவர்களை தேவை ஏதும் இன்றி பார்ப்பது, பார்க்கக் கூடாத காட்சிகளை பார்ப்பது கண்கள் செய்யும் விபசாரம் என நபியவர்கள் கூறினார்கள் (புஹாரி, முஸ்லிம்)

அடுத்ததாக, ஓர் அந்நிய (அஜ்னபி) ஆணும் அந்நிய பெண்ணும் (முஸ்லிமாக இருந்தாலும் காபிராக இருந்தாலும்) தனிமையில் இருப்பதை இஸ்லாம் ஹறாமாக்கியுள்ளது. எந்த இடமாக இருந்தாலும் தனிமையில் ஓர் அஜ்னபி ஆணும் பெண்ணும் இருக்க வேண்டிய சூழல் உருவாகினால், அதை முற்றாக தவிர்த்துவிடுமாறும் அவ்விடத்திலிருந்து எழுந்து சென்றுவிடுமாறும் மார்க்கம் கட்டளையிடுகிறது.

நபியவர்கள் கூறினார்கள்: 'ஓர் ஆண் அந்நிய பெண்ணுடன் தனிமையில் இருக்க வேண்டாம். அவ்வாறிருந்தால் ஷைத்தான் அங்கு மூன்றாமவனாக இருப்பான் (அஹ்மத்). மேலும் நபியவர்கள் கூறினார்கள்: 'உங்களில் ஒருவர் ஓர் அஜ்னபியான பெண்ணுடன் மஹ்ரமான ஆணுடனேயன்றி இருக்க வேண்டாம்' (புஹாரி, முஸ்லிம்)

மேற்குறித்தவாறு இஸ்லாம் இட்ட வரம்புகளை மீறும் போதுதான் தவறான ஆண்-பெண் தொடர்புகள், விபசாரம் போன்ற பாவங்கள் தலைதூக்குகின்றன. அல்லாஹ் கூறுகிறான்: 'விபசாரத்தின் பக்கம் நீங்கள் நெருங்க வேண்டாம். நிச்சயமாக அது மானக்கேடானதாகும். அது மிகக்கெட்ட வழியாகும்' (17 : 32).

விபசாரம் சமூகத்தில் பல்வேறு வடிவங்களில் காணப்படுகிறது. முறைப்படி திருமணம் செய்யாமல் அஜ்னபியான ஓர் ஆணும் பெண்ணும் தனித்து வாழ்வது விபசாரமாகும். காபிரான ஆண்களையோ பெண்களையோ அவர்கள் இஸ்லாத்தை ஏற்கும் வரை திருமணம் செய்வது விபசாரமாகும். அல்லாஹ் கூறுகிறான்: 'இணைவைக்கும் பெண்களை - அவர்கள் ஈமான் கொள்ளும் வரை நீங்கள் திருமணம் செய்யாதீர்கள். ஏனெனில் இணைவைக்கும் பெண்ணை விட -அவள் உங்களை கவரக்கூடியவளாக இருப்பினும் - ஈமானுள்ள ஓர் அடிமைப் பெண் மிகச் சிறந்தவளாவாள். மேலும் இணைவைக்கும் ஆண்கள் - ஈமான் கொள்ளும் வரை ஈமான் கொண்ட பெண்களுக்கு திருமணம் செய்து கொடுக்காதீர்கள். இணைவைக்கும் ஓர் ஆணை விட - அவன் உங்களைக் கவரக்கூடியவனாக இருப்பினும் - ஈமான் கொண்ட ஓர் அடிமை மிகச்சிறந்தவனாவான்' (2 : 221). எனவே, காபிரான பெண்களையோ ஆண்களையோ திருமணம் முடித்து வாழ்பவர்கள் காலமெல்லாம் விபசாரத்திலேயே ஈடுபடுபவர்களாவார்கள்.

இவ்வாறே உடன் பிறந்த இரு சகோதரிகளை ஒரே நேரத்தில், சம காலத்தில் திருமணம் செய்வதும் விபசாரமாகும். இவ்வாறு இரு சகோதரிகளை ஒரே நேரத்தில் திருமணம் முடித்து வாழ்பவர் காலமெல்லாம் விபசாரத்திலேயே இருக்கிறார்.

அதிலும் குறிப்பாக வயோதிப நிலையில் விபசாரம் புரிவது விபசாரத்திலேயே மிகமிக மோசமான நிலையாகும். நபியவர்கள் கூறினார்கள்: 'மறுமையில் அல்லாஹ் மூன்று நபர்களுடன் பேசவும் மாட்டான், அவர்களைத் தூய்மைப்படுத்தவும் மாட்டான், அவர்களைப் பார்க்கவும் மாட்டான். அம் மூவரும் யாரெனில், வயோதிப நிலையில் விபசாரம் புரிந்தவர், பொய் கூறும் அரசன், பெருமையடிக்கும் ஏழை ஆகியோராவர்' (முஸ்லிம்)

இவ்வாறே அயல் வீட்டு மனிதரின் மனைவியோடு விபசாரம் புரிவதும் விபசாரத்திலேயே மிக மோசமான நிலையாகும். இப்னு மஸ்ஊத் றழியல்லாஹுஅன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்: 'பாவங்களிலேயே மிக கடுமையான பெரும் பாவம் எது? ' என நபியவர்களிடம் நான் கேட்ட போது நபியவர்கள், 'அல்லாஹ் உன்னைப் படைத்தவனாக இருக்கும் போது ஏதாவதொன்றை அவனுக்கு இணையாக ஆக்குவதாகும்' என்றார்கள். 'அதற்குப் பின் மிக மோசமான பாவம் எது? ' என்று கேட்டதற்கு 'உமது அயல் வீட்டானின் மனைவியோடு விபசாரம் புரிவதாகும்' என்று கூறினார்கள் (அபூதாவூத்).

விபசாரம் என்ற பெரும் பாவத்தின் காரணமாக உலகிலும் அல்லாஹ்வின் சோதனைகளை சந்திக்க வேண்டும், மறுமையிலும் கொடிய நரக வேதனையை சந்திக்க வேண்டும்.

நபிகளார் அவர்கள் கூறினார்கள்: 'ஒரு சமூகத்தில் விபசாரம் பகிரங்கமாக நடைபெற்றால் முன்னைய சமூகங்கள் சந்தித்திராத நோய்கள், பஞ்சம் ஆகியவற்றினால் அந்த சமூகத்தினர் சோதிக்கப்படுவார்கள்' (அபூதாவூத், ஹாகிம்). மேலும் நபிகளார் கூறினார்கள்: 'எந்த சமூகத்தில் விபசாரமும் வட்டியும் நடைபெறுகிறதோ அந்த சமூகம் அல்லாஹ்வின் தண்டனையை தாமாகவே வரவழைத்துக்கொள்வார்கள்' (இப்னு ஹிப்பான்).

'விபசாரத்தில் ஈடுபடும் ஒரு முஸ்லிம் விபசாரத்தில் ஈடுபடும் நேரத்தில் ஈமானுடன் இருக்கமாட்டான்' என்றும் நபியவர்கள் குறிப்பிட்டார்கள். (புஹாரி)

ஸஹீஹுல் புஹாரியிலே இடம்பெறக் கூடிய ஒரு நீண்ட ஹதீஸிலே நபியவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள்: 'இரு மலக்குகள் என்னை அழைத்துச் சென்று ஓர் இடத்தை காட்டினார்கள். அங்கு ஓர் அடுப்பு இருந்தது. அதன் மேற்புறம் ஒடுங்கியதாகவும் கீழ்ப்புறம் விசாலமானதாகவும் இருந்தது. அதன் அடியில் நெருப்பு மூட்டப்பட்டிருந்தது. அந்த அடுப்பினுள் போடப்பட்டிருந்த பல ஆண்களும் பெண்களும் நிர்வாண நிலையில் ஓலமிட்டுக் கொண்டிருந்தார்கள். வேதனை தாங்க முடியாமல் அவர்கள் வெளியே வந்துவிட முயற்சித்த போதெல்லாம் அவர்கள் அந்த அடுப்பின் அடியில் தள்ளப்பட்டார்கள். இத்தகைய வேதனையை அனுபவிப்பவர்கள் யார் என கேட்ட போது இவர்கள்தான் விபசாரம் செய்த ஆண்களும் பெண்களும் என அவ்விரு மலக்குகளும் எனக்குப் பதிலளித்தார்கள்'.

பாவம் செய்தவர்கள் திருந்துவதற்கென்று அல்லாஹ் பல்வேறு சந்தர்ப்பங்களை வழங்கியிருக்கிறான். எனவே, அச்சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக்கொண்டு இனிமேல் இத்தகைய பிழையான ஆண்-பெண் தொடர்புகள், தனியான சந்திப்புகள், பாவமான உரையாடல்கள், விபசாரம் போன்ற ஈமானுக்கும் மறுமை வாழ்வுக்கும் குந்தகம் விளைவிக்கக் கூடிய செயற்பாடுகளிலிருந்தும் அச்செயற்பாடுகளுக்கு இட்டுச்செல்லும் அனைத்து வழிமுறைகளிலிருந்தும் விடுபட்டு, அல்லாஹ்விடம் அழுது பாவமன்னிப்புக் கோர வேண்டியது மிகமிக அவசியமாகும். இல்லையேல் அல்லாஹ் அல்குர்ஆனில் குறிப்பிடுவது போன்று மறுமையில் நரக நெருப்பின் எரிகொள்ளிகளாக மாறி மீள முடியாத பெருந் துன்பத்தைச் சந்திக்க நேரிடும் என்பதை எந்த ஈமானிய நெஞ்சமும் மறந்துவிடக்கூடாது.

அல்லாஹ் நம் அனைவரையும் தன் மன்னிப்பினாலும் அருளினாலும் சூழ்ந்துகொள்வானாக.

## ஐந்து உபதேசங்கள்

அபூஹுரைரா றழியல்லாஹுஅன்ஹுஅவர்கள் அறிவிக்கிறார்கள்: ஒரு தடவை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஸஹாபாக்கள் மத்தியில் நான் கூறப்போகும் வாசகங்களை வாழ்வில் எடுத்து நடப்போர் யார்? அல்லது அவற்றைப் பிறருக்கு கற்றுக்கொடுப்போர் யார் இருக்கிறீர்கள்? என்று கேட்ட போது அதற்கு நான் இதோ நான் இருக்கிறேன் என்று கூறியதும் நபியவர்கள் எனது கரத்தைப் பற்றி (பின்வரும்) ஐந்து உபதேசங்களையும் எண்ணி எண்ணிக் கூறினார்கள் :

**1. ஹறாமான விடயங்களை தவிர்ந்துவாழ்.**
**நீ மனிதர்களிலேயே உயர்ந்த வணக்கசாலியாகி விடுவாய்.**
**2. அல்லாஹ் உனக்கு வழங்கியவற்றைப் பொருந்திக்கொள். நீ மனிதர்களில் உயர்ந்த செல்வந்தனாகிவிடுவாய்.**
**3. அண்டை அயலாருடன் நல்ல முறையில் நடந்துகொள்.**
**நீ உண்மை முஃமினாகி விடுவாய்.**
**4. உனக்கு எது விருப்பமோ அதையே பிறருக்கும் விரும்பு.**
**நீ உண்மை முஸ்லிமாகி விடுவாய்.**
**5. அதிகம் சிரிக்காதே. அதிகச் சிரிப்பு உள்ளத்தை மரணிக்கச் செய்து விடும்.**
**(திர்மிதி, முஸ்னத் அஹ்மத்)**

# இறுதிப் பயணம் மறுமை

- அஷ்ஷெய்க் MIM. வபா (கபூரி) -

எமது இறுதி முடிவை அழகாக ஆக்கிக் கொள்ள முயற்சிக்க வேண்டும். அதற்காக நாம் அல்லாஹ் விரும்பும் மக்களாக எம்மை தயார் செய்துகொள்ள தவறக்கூடாது. நாம் நம்மை பிரயாணம் செய்துவந்த ஒரு பயணியை போன்று கருதி செயற்படுவோமானால், உலகை அளவுக்கதிகமாக நேசம் கொண்டு அலையமாட்டோம். ஏனெனில் நமது உயிரிலும் மேலான உத்தமத் தூதர் உம்மி நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக ஸஹீஹான ஹதீஸ்களில் வந்துள்ள செய்தியை அவதானிக்க வேண்டும், றஸூலுல்லாஹ் அவர்கள் 'எனக்கும் இந்த உலகிற்கும் உள்ள சம்பந்தம் ஒரு மரத்தடியில் நிழலுக்காக ஒதுங்கிவிட்டு, பின்னர் அந்த மரத்தடியை விட்டுச்செல்லும் பிரயாணிக்கும் உள்ள தொடர்பேதான்' என்று கூறியுள்ளார்கள்.

எனவேதான் இந்த நிலையற்ற உலக ஆசாபாச உணர்வுகளுக்கு இடம்கொடுக்காமல் மறுமை வாழ்வை அதிகமதிகம் நினைவிலிருத்தி அந்த மறுமைக்கு தயாராகுபவர்தான் புத்திசாலி. றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் 'எவர் தனது மனோ இச்சைகளை விடுத்து மரணத்திற்குப் பின்னாலுள்ள வாழ்வுக்காக தயாராகுவாரோ அவர்தான் புத்திசாலி என்றும் தனது மனோ இச்சைக்கு வழிப்பட்டு வாழ்ந்து அல்லாஹ்வின்மீது மேலெண்ணம் கொள்பவர்தான் அறிவிலி' என்றும் கூறியுள்ளார்கள் (திர்மிதி).

மரண நேரம் நெருங்கிவட்டால் எந்த ஒரு ஆத்மாவுக்கும் ஒரு வினாடி பிற்படுத்தப்படவும் மாட்டாது, முற்படுத்தப்படவும் மாட்டாது. ஸூறா அல்முனாபிகூனில் 10,11ம் வசனங்களில் இவ்வாறானவர்களின் நிலையை அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான்: 'உங்களில் ஒருவருக்கு மரணம் வருவதற்கு (சற்று) முன், என்னுடைய இறைவனே எனக்கு சற்று நேரம் தவணை தரமாட்டாயா? நான் ஸதகாக்களை (நன்மையான விடயங்களை) செய்து நல்லவர்களில் ஒருவனாக ஆகிவிடுவேன் என்பான். மரண வேளை ஒருவருக்கு வந்துவிட்டால் தவணை தரப்படமாட்டாது. அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கறிவான்'.

ஆகவே ஸக்றாத் நேரம் வரும் வரை ஏமாற்றத்திலும் மறதியிலும் இருந்து விட்டு இறுதிவேளையில் கைசேதப்படும் வரை இருக்காது இப்போதிருந்தே ஒவ்வொரு வினாடியும் மரணம் வரலாம் என்ற எதிர்பார்ப்புடன் அல்லாஹ்வுடைய கடமைகளை முறையாக இறையச்சத்துடன் நிறைவேற்றி வருவதுடன் இஸ்தி∴பார், தவ்பா, இறை சிந்தனை, ஸதகாக்கள் என்று முடிந்தளவு அமல்களை அதிகம் அதிகம் செய்துவர வேண்டும்.

அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உலகிற்கே அருளாக, றஹ்மதுல்லில் ஆலமீனாக வந்தவர்கள். அல்லாஹ்வின் ஹபீபாக, அன்பான நேசராக வாழ்ந்தவர்கள். அப்படியான அவர்களுக்கே ஸக்றாத் வேதனை இருந்துள்ளதென்றால் சாதாரணமானவர்களான, பாவச் சூழலிலேயே உழலுகின்ற எமது நிலைமை எவ்வாறானதாக இருக்கும் என்று சிந்தித்துப்பார்க்க வேண்டாமா?

நபியவர்களின் கடைசி நேரம். ஆயிஷா றழியல்லாஹுஅன்ஹா அவர்களின் மடியில் தலையை வைத்த நிலையில் இருக்கின்றார்கள், அருகில் ஒரு பாத்திரத்தில் நீர் வைக்கப்பட்டிருக்கிறது. நபியவர்கள் அடிக்கடி அந்தப்பாத்திரத்தில் கையைவிட்டு "லாயிலாஹ இல்லல்லாஹ், இன்ன லில்மவ்தி லஸக்றாத்" ('நிச்சயமாக மரணத்திற்கு வேதனையுண்டு') என்று கூறிக்கூறி தனது புனிதமான முகத்தில் தண்ணீரை அள்ளி தடவித்தடவி இருந்தார்களாயின் இதனை எவர்தான் இலேசாக கருதமுடியும் ?

(இன்ஷா அல்லாஹ் தொடரும்)

## தெரிந்துகொள்ள ...

01. உலூமுல் குர்ஆன் என்றால் என்ன?
    - அல்குர்ஆனை அடியொற்றி வளர்ந்த கலை
02. இமாமுல் மதீனா என்றழைக்கப்பட்ட இமாம் யார்?
    - இமாம் மாலிக் றஹிமஹுல்லாஹ்
03. ஆலமுல் பர்ஸக் என்றால் என்ன ?
    - கப்ருடைய வாழ்வு
04. பிக்ஹுல் அக்பர் என்ற நூலின் ஆசிரியர் யார்?
    - இமாம் அபூஹனீபா றஹிமஹுல்லாஹ்
05. இமாம் ஷாபிஈ றஹிமஹுல்லாஹ் அவர்களின் பிறப்பிடம் எது?
    - பலஸ்தீன்
06. வஹி எழுதுவதற்கு தலைமை வகித்த ஸஹாபி யார்?
    - ஸைத் இப்னு தாபித் றழியல்லாஹுஅன்ஹு
07. திட உறுதி கொண்ட நபிமார்கள் எவ்வாறு அழைக்கப்படுவர் ?
    - உலுல் அஸ்ம்

- ARF. அஸ்மிலா -
மட்/ மாக்கான் மாக்கார் வித்தியாலயம்
(கலைப்பிரிவு)

# கைத்தொலைபேசிப் பாவனையும், சீரழியும் இளைஞர், யுவதிகளும்.

- மௌலவியா பின்து அப்திர் ரஷீத் (கைரிய்யா)

அதிவேக விஞ்ஞான துறையின் வளர்ச்சியால் உலகம் உள்ளங்கைகளில் எனப் பேசிக் கொள்கின்றோம். அதேவேளை அதனால் ஏற்படுகின்ற கலாசார சீரழிவுகளையும், அசிங்கங்களையும் கண்டும், காணாமலும் ஏனோ, தானோ என அலட்சியமாக விட்டுவிடுகிறோம். இவ்வாறு விட்டு விடுகிறோமா? நினைவுபடுத்துங்கள். நிச்சயமாக அல்லாஹ் மறுமை நாளில் அனைவர் முன்னிலையிலும் இடம், காலம், உறுப்புக்கள் என்பவைகளை சாட்சிகளாகக் கொண்டு கேள்வி கேட்பானே, இந்நிலையில் அதனைத் தடுக்காமலும், அதனை விட்டும் விலகாமலும் இருக்கின்றேனே, எனது நிலை என்ன? என்பதை ஒவ்வொருவரும் சிந்தியுங்கள்.

யார், எவர் என்று தெரியாது அந்நியர்களுடன் தொடர்பு கொண்டு பேசக்கூடாத மற்றும் ஆபாச உணர்வுகளைத் தூண்டக்கூடிய பேச்சுக்களைப் பேசவதும், ஜோக் என்ற பெயரில் குறுந்தகவல்கள் அனுப்புவதும், இச்சையைத் தூண்டக்கூடிய படங்களை அனுப்புவதும் என பொன்னான நேரங்களையும், பணத்தையும் வீணாக செலவழித்துக் கொள்கின்றோம். இவை அனைத்தும் வீண்விரயம் என விளங்கிக் கொள்கின்றோமா? நிச்சயமாக இல்லை. அதிலும் தவறு விடுகின்றோம்.

அல்லாஹ் அல்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான்:
'நிச்சயமாக வீண் விரயம் செய்வோர் ஷைத்தானின் சகோதரர்களாக இருக்கின்றனர். ஷைத்தானோ, நன்றி செலுத்தாது மாறு செய்கின்றவனாக இருக்கின்றான்' (சூறா பனி இஸ்ராயீல்)

வீண் விரயம் செய்வோர் ஷைத்தானின் சகோதரர்கள் என்று குறிப்பிட்டது மட்டுமன்றி வீண்விரயம் செய்வோரை அல்லாஹ் நேசிக்க மாட்டான் என்று இன்னுமோர் இடத்தில் பிரஸ்தாபிக்கின்றான்.

கையிலே போனை எடுத்தால் வீதியில் வாகனம் வருவதும் விளங்குவதில்லை, தான் வாகனத்திலே போய்க்கொண்டிருக்கின்றேன் என்பதையும் மறந்து விடுகிறார்கள். வீட்டிலே தாய் உதவிக்கு அழைப்பதும் விளங்குவதில்லை. அந்தளவு பாவத்தில் மூழ்கிக் கிடக்கின்றார்கள் இன்றைய இளைஞர், யுவதிகள்.

அதுமட்டுமன்றி திருமணம் பேசி வைத்தவர்கள் பேசிவைத்த அந்த அந்நிய ஆணுடன் அல்லது பெண்ணுடன் மணிக்கணக்கில் உரையாடுகிறார்கள், இதன் மூலம் மார்க்கம் விதித்த வரம்புகளை மீறிவிடுகிறார்கள்.

அதுமட்டுமன்றி திருமணம் முடித்தவர்கள் கணவன் வெளியே சென்ற பின்னர் என்னோடு ஒன்றாகப் படித்தவன், எனக்கு உதவி செய்தவன், கணவனின் நண்பன் என சாட்டுப் போக்குகளை வைத்துக்கொண்டு அவர்களுடன் தொடர்பு கொண்டு அளவளாவுவது எவ்வளவு ஈனமான, வெட்கமற்ற செயல் என்பதை நாம் புரியவில்லையா?

ஒரு பாவச் செயலை செய்பவன் தொடர்ந்தும் அப்பாவத்திலே மூழ்கிக் கிடக்கமாட்டான். அவனுக்கு உபதேசங்கள், அறிவுரைகள் கிடைக்கின்றபோது அவற்றை விட்டும் நீங்கி தவ்பா செய்து திருந்தி விடுவான். அவ்வாறே நாம் ஒவ்வொருவரும் சொல்பவர் யாராக இருப்பினும், சொல்லப்படுகின்ற விடயத்தை கவனத்திலெடுத்து படிப்பினை பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஆகவே, இந்த முறையற்ற செல்போன் பாவனையால் இவ்வுலகில் ஏற்படும் ஆபத்துக்கள், பிரச்சினைகளை விடவும் மிக பயங்கரமான கேள்விகளுக்கும், விசாரணைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டும் என்பதைப் பயந்து இதை வாசிக்கின்ற, கேட்கின்ற நெஞ்சங்கள் அனைத்தும் இவற்றிலிருந்து தம்மை தூரப்படுத்தி அகத்திலும், புறத்திலும் நல்லோர்களாய் வாழ்ந்து இம்மையிலும், மறுமையிலும் ஈடேற்றம் பெறுவோமாக.

## ஒரு நிமிடத்தை ஒதுக்குங்கள்!

**ஒரு நிமிடத்தில்** 5 தடவைகள் ஸூறா பாதிஹாவை ஓதலாம். இதனால் 7000க்கும் அதிகமான நன்மைகளை சம்பாதித்துக் கொள்வீர்கள்.

**ஒரு நிமிடத்தில்** 'குல்' ஸூறாக்கள் மூன்றையும் காலையிலும் மாலையிலும் மூன்று தடவைகள் ஓதலாம். அது உங்கள் காரியங்கள் அனைத்திற்கும் போதுமானவையாகும்.

**ஒரு நிமிடத்தில்** 100 தடவைகள் 'ஸுப்ஹானல்லாஹி வபி ஹம்திஹி' என்று கூறலாம். இவ்வாறு கூறினர்ல் அன்றைய தினம் நீங்கள் செய்த பாவங்கள் கடல் நுரையளவு இருந்தாலும் மன்னிக்கப்படும்.

**ஒரு நிமிடத்தில்** 40 தடவைகள் 'லா ஹவ்ல வலா குவ்வத இல்லா பில்லாஹ்' என்று கூறலாம். அது உங்களுக்கு சுவனப் புதையலைப் பெற்றுத் தரும்.

**ஒரு நிமிடத்தில்** நூறு தடவைகளுக்கு மேல் 'அஸ்தக்பிருல்லாஹ்' என்று கூறலாம். இதனால் உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படும். உங்கள் காரியங்கள் இலகுவாகும். துன்பங்கள் நீங்கும்.

**ஒரு நிமிடத்தில்** 'ஸுப்ஹானல்லாஹி வபி ஹம்திஹீ வலா இலாஹ இல்லல்லாஹுவல்லாஹுஅக்பர்' என்று 25 தடவைகள் கூறலாம். இதன் மூலம் அல்லாஹ்வின் அன்பை சம்பாதித்துக் கொள்வீர்கள்.

**ஒரு நிமிடத்தில்** 'ஸுப்ஹானல்லாஹி வபி ஹம்திஹீ ஸுப்ஹானல்லாஹில் அழீம்' என்று 50 தடவைகள் கூறலாம். இதனால் அல்லாஹ்விடம் உள்ள உங்கள் நன்மைத் தட்டின் எடை அதிகரிப்பதோடு, அல்லாஹ்வின் நெருக்கத்தையும் பெற்றுக்கொள்வீர்கள்.

**ஒரு நிமிடத்தில்** ஒருவருக்கு ஒரு நன்மையை ஏவலாம். ஒரு தீமையை தடுக்கலாம். ஒருவருக்கு ஆறுதல் வார்த்தையேனும் கூறலாம். உறவினர் ஒருவரை தொலைபேசியிலேனும் அழைத்து சுகம் விசாரிக்கலாம். இவை அனைத்திற்கும் எண்ணற்ற நன்மைகள் காத்திருக்கின்றன.

**(ஆதாரபூர்வமான ஹதீஸ்களிலிருந்து தொகுக்கப்பட்டவை)**

# நபி வழியில் நம் தொழுகை

தொடர் 02

- ஹாபிழ் ARM. றிஸ்வான் -

(கடந்த மாத இதழில் தொழுகையில் நபியவர்களைப் பின்பற்றுவதன் அவசியம் பற்றி ஆராயப்பட்டது. இவ்விதழிலிருந்து தொழும் முறை ஆதாரங்களோடு தரப்படுகிறது)

**1) கிப்லாவை முன்னோக்குதல்**

தொழுகையை ஆரம்பித்ததிலிருந்து தொழுது முடியும் வரை உடல் முழுவதும் கிப்லா திசையை முன்னோக்கி நிற்பது அவசியமாகும். இல்லையேல் தொழுகை ஒரு போதும் நிறைவேறாது.

๑ தொழுகையை முறைதவறி நிறைவேற்றிய ஒருவரை நோக்கி நபியவர்கள் பின்வருமாறு கூறினார்கள் : 'நீர் தொழுகைக்காக ஆயத்தமானால் வுழூவை பூரணமாக செய்து கொள், பின்னர் கிப்லா திசையை முன்னோக்கி நில்' (ஸஹீஹுல் புஹாரி, ஸஹீஹ் முஸ்லிம்).

๑ ஆயினும் வாகனத்தில் பயணிக்கும் ஒருவர் ஸுன்னத்தான தொழுகையை தொழ விரும்பினால், வாகனத்தில் இருந்தவாறு ஆரம்பத் தக்பீரின் போது மாத்திரம் கிப்லாவை முன்னோக்குவார். பின்னர் வாகனம் கிப்லா திசையல்லாத வேறு திசைகளில் பயணித்தாலும் தொழுகையை வாகனம் செல்லும் திசைகளில் நிறைவேற்றுவது ஆகுமானதாகும். நபிகளார் இவ்வாறே தொழுதிருக்கிறார்கள்.

'நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் தமது ஒட்டகத்திலிருந்தவாறு ஸுன்னத்தான தொழுகையை தொழ நினைத்தால் கிப்லாவை முன்னோக்கி ஆரம்பத் தக்பீர் சொல்வார்கள். பின்னர் வாகனம் செல்லுவதற்கேற்ப (கிப்லா திசையல்லாத வேறு திசைகளில் வாகனம் பயணித்தாலும்) தொழுகையை தொழுது முடிப்பார்கள்' (அபூதாவூத்).

ஆனால், வாகனத்தில் இருக்கும் ஒரு பயணி பர்ழான தொழுகையை தொழுவதாயின் வாகனத்திலிருந்து இறங்கி தொழுகையின் ஆரம்பத்திலிருந்து இறுதி வரை கிப்லாவை முன்னோக்கியிருக்க வேண்டும். 'நபியவர்கள் பயணத்திலிருக்கும் போது பர்ழான தொழுகையை தொழ நாடினால் வாகனத்திலிருந்து இறங்கி கிப்லாவை முன்னோக்கி தொழுவார்கள்' (புஹாரி, பைஹகீ). ஆயினும் வாகனத்திலிருந்து இறங்குவது சாத்தியமில்லை, தொழுகை தவறிப்போய் விடும் என்ற நிலையிருந்தால் மாத்திரம் வாகனத்திலிருந்தவாறு பர்ழு தொழுகையை நிறைவேற்ற முடியும்.

**2) தடுப்பு (ஸுத்றா) ஒன்றை முன்னால் வைத்தல்**

தனியாக தொழுபவர்களும் இமாமாக தொழுகை நடத்துபவரும் முன்னால் தடுப்பு (ஸுத்றா) ஒன்றை வைத்துக் கொள்வது அல்லது தடுப்பு ஒன்றை முன்னோக்குவது அவசியமாகும். தடுப்பு என்பது சுவராகவோ, தூணாகவோ, கதிரையாகவோ, ஒரு தடியாகவோ வேறு எதுவாகவும் இருக்கலாம். இன்றிருக்கும் பலர் இது பற்றி அறியாதிருக்கின்றனர். அறிந்திருந்தாலும் மிக பொடுபோக்காக இருக்கின்றனர்.

๑ நபியவர்கள் கூறினார்கள் : 'தடுப்பு ஒன்றை முன்னால் வைக்காமல் நீங்கள் தொழ வேண்டாம். (தொழும் போது) உங்களுக்கு முன்னால் யாரும் குறுக்கே செல்ல விட வேண்டாம். (குறுக்கே செல்பவரை நீங்கள் தடுத்தும் கூட) அவன் மறுத்தால் அவனை கொன்று விடுங்கள். ஏனெனில் அவனுடன் தோழன் (ஷைத்தான்) இருக்கிறான்' (ஸஹீஹ் இப்னு குஸைமா).

๑ தடுப்புக்கும் தொழுபவருக்கும் இடையே மூன்று முழம் இடைவெளி இருக்கத்தக்கதாக நெருக்கமாக நிற்க வேண்டும்.

'நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் தொழும் போது தடுப்புக்கு நெருக்கமாக நிற்பார்கள். அவர்களுக்கும் தடுப்புக்கும் இடையில் மூன்று முழங்கள் இடைவெளி இருக்கும்' (ஸஹீஹுல் புஹாரி , முஸ்னத் அஹ்மத்).

நபியவர்கள் பெருநாள் தொழுகையை திடலில் நிறைவேற்றும் போது தமக்கு முன்னால் தடியொன்றை நட்டி அதை தடுப்பாக வைத்து தொழுகையை நிறைவேற்றுவார்கள். இவ்வாறே பிரயாணத்தில் இருக்கும் போது வழியில் தொழ நேர்ந்தால் முன்னால் ஏதாவது ஒன்றை தடுப்பாக வைத்துவிட்டு தொழுவார்கள். சில வேளைகளில் தான் பயணம் செய்த ஒட்டகத்தை முன்னால் நிறுத்தி விட்டு தொழுவார்கள். அந்தளவுக்கு நபியவர்கள் (ஸுத்றா) தடுப்பு ஒன்றை முன்னால் வைத்து தொழுவதில் அதிக கவனம் செலுத்தியிருக்கிறார்கள். (புஹாரி, முஸ்லிம், அபூதாவூத், பைஹகீ)

இவ்வாறு தடுப்பு ஒன்றை வைப்பதால் ஷைத்தான் தொழுகையில் ஆதிக்கம் செலுத்துவதிலிருந்து பாதுகாப்புப் பெறலாம். வீட்டில் தொழும் பெண்கள் கூட சுவரையோ, கதிரை, மேசை போன்றவற்றையோ தடுப்பாகக் கொண்டு தனக்கும் தடுப்புக்கும் இடையில் ஸுஜூத் செய்வதற்கு வசதியாக மூன்று முழம் இடைவெளிவிட்டு தொழுகையை நிறைவேற்றுவதில் கவனம் செலுத்த வேண்டும்.

๑ இமாமைப் பின்பற்றி மஃமூமாக தொழுபவர்களுக்கு இமாமே தடுப்பாக இருக்கிறார் என்பதால் அவர்கள் தடுப்பு வைக்கத் தேவையில்லை.

(இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில்...)

# ஐயமும் தெளிவும்

**ஐயம் :** வழக்கறிஞர் (lawyer), கணக்காளர் (accountant) தொழில்களில் ஈடுபட முடியுமா? இது இஸ்லாத்தின் பார்வையில் கூடுமா? ஏனெனில் கணக்கியல் (accounting) படிப்பதால் கிடைக்கும் வேலைகளுக்கு வட்டி கணக்கு பார்க்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறதே! இதற்கு சரியான தீர்வு என்ன?

**C.A.** கிராஸ் (ஆலையடி வீதி), மட்/ அலிகார் மத்திய கல்லூரி

**தெளிவு :** சட்டம் (law), கணக்கியல் (accounting) போன்றவை ஏனைய கல்வித் துறைகளைப் போன்ற கல்வித் துறைகளாகும். கணிதம், விஞ்ஞானம் போன்ற துறைகளில் கல்வி கற்பது மார்க்கத்தில் ஆகுமானது, சில நேரங்களில் அவசியமானது என்பதைப் போலவே சட்டம், கணக்கியல் துறைகளைத் தேர்வு செய்து கல்வியைத் தொடர்வது ஆகுமானதாகும்.

நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் அன்றைய காலத்தின் தேவைகளாக இருந்த சில துறைகளில் கல்வி கற்குமாறு ஸஹாபாக்கள் பலரை தூண்டியிருக்கிறார்கள். வேற்று மொழிகள் சிலவற்றை கற்குமாறு நபியவர்கள் சில ஸஹாபாக்களுக்கு கட்டளையிட்டார்கள். இவ்வாறே நீச்சல், குதிரைப் பயிற்சி போன்றவற்றை கற்றுக்கொள்ளுமாறும் தூண்டினார்கள். தான் எழுத, வாசிக்கத் தெரியாத உம்மி நபியாக இருந்த போதிலும் பத்ரு யுத்தத்தில் கைதிகளாக பிடிபட்ட காபிர்களை மதீனா சிறார்களுக்கு எழுதவும் வாசிக்கவும் கற்றுக்கொடுக்குமாறு பணிப்புரை விடுத்தார்கள்.

மார்க்கத்தில் கற்பதற்கு தடைசெய்யப்பட்டவை என்று சில துறைகள் உள்ளன. உதாரணமாக இசை, நடனம், சிற்பம் போன்றவற்றை இஸ்லாம் தடைசெய்திருப்பதால் இவற்றை கற்பது ஹறாமாகும். இவற்றைத் தவிர ஏனைய துறைகள் எவையாயினும் அவற்றைக் கற்பதில் எந்தத் தடையும் இல்லை. இன்னும் கூறினால் முஸ்லிம் சமூகம் பல்வேறு துறைகளில் முன்னேற்றம் காண வேண்டிய அவசியம் இருப்பதால் சட்டம், கணக்கியல் உட்பட கணிதம், விஞ்ஞானம், மருத்துவம், சமூகவியல், பொருளியல், கணனி போன்ற மற்றும் பல துறைகளில் கற்பது அவசியமானதாகிறது.

ஆயினும் இத் துறைகளில் கல்வி கற்போருக்கு அடித்தளமாக அமைய வேண்டியது இஸ்லாமிய வாழ்க்கை முறையாகும். ஏதேனும் துறையொன்றில் கற்று அது சார்ந்த தொழிலில் ஈடுபடும் ஒருவர் இஸ்லாம் ஹறாமாக்கிய செயல்களில் ஈடுபட நேர்ந்தால், அச் செயல்களை விட்டுவிடுவது கட்டாயமாகும். இல்லாவிட்டால் அல்லாஹ்விடம் அவர் தப்ப முடியாது. உதாரணமாக, சட்டத் துறையில் கல்வி கற்ற ஒருவர் வழக்கறிஞராக தொழில் புரிவது குற்றமில்லை. ஆயினும் பொய்யென்று தெரிந்து கொண்டே அதற்கு ஆதரவாக வழக்காடுதல், குற்றவாளியை நிரபராதியாக்கி, நிரபராதியை குற்றவாளியாக்குதல், இலஞ்சம் வாங்குதல் அல்லது கொடுத்தல் போன்ற ஹறாமான செயல்களை முற்றாக தவிர்த்து தனது தொழிலைத் தொடர்வது அவருக்கு கடமையாகும். இத்தகைய ஹறாமான செயல்களை தவிர்ப்பதற்கு வாய்ப்பே இல்லையெனில் அத்தொழிலை விட்டுவிட்டு வேறு தொழிலை தேடிக்கொள்வது அவர் மீது அவசியமாகும். ஏனெனில் சட்டம் படித்தவர் வழக்கறிஞராகத்தான் தொழில்புரிய வேண்டும் என்று எந்தக் கட்டாயமும் இல்லை. பல நிறுவனங்களில் சட்ட ஆலோசகராக அல்லது நிறுவன பணிப்பாளராக, துறைத் தலைவர்களாக அவர்கள் செயற்பட இன்றைய தொழில் சந்தையில் பல வாய்ப்புகள் உள்ளன.

இவ்வாறே கணக்கியல் துறையில் படித்து கணக்காளராக தொழில் புரிவதில் எந்தத் தவறுமில்லை. ஆயினும் வட்டிக் கணக்கு, பொய்க் கணக்கு எழுதுகின்ற சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன என்றால் அவற்றைத் தவிர்த்துவிட வேண்டும். அல்லது தான் கற்ற துறைக்குப் பொருத்தமான, ஹறாம் கலக்காத வேறு தொழில்களைத் தேடிப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் தனது மார்க்கத்தைப் பாதுகாப்பது அவரவர் கையிலேயே தங்கியுள்ளது. நமது மார்க்கத்தைப் பாதுகாத்துக்கொள்வதற்கு நாம் சார்ந்துள்ள துறை அல்லது நாம் புரியும் தொழில் இடம்தரவில்லை எனில், அல்லாஹ் நமக்காக வேறு பல ஹலாலான துறைகளையும் தொழில்களையும் இவ்வுலகில் ஏற்படுத்திவைத்துள்ளான் என்பதை மறந்துவிடக்கூடாது. அல்லாஹ் மிகவும் அறிந்தவன்.

**ஐயம் :** இன்று அனைத்து யுவதிகளுக்கிடையிலும் நிலவி வருகின்ற ஒரு செயற்பாடு கண் புருவங்களை மழித்து அலங்கரிப்பதாகும். இது கூடுமா?

**AAF.** ஹியாஸா, காதியார் வீதி, ஏறாவூர் 06

**தெளிவு :** கண் புருவங்களை மழித்து அலங்கரிப்பது இஸ்லாம் தெட்டத்தெளிவாக தடைசெய்த ஹறாமான செயலாகும். நபியவர்கள் இத்தகையவர்களை சபித்ததோடு, அல்லாஹ்வின் படைப்பில் மாற்றம் செய்பவர்கள் என்றும் சாடினார்கள். உடலில் பச்சை குத்துபவர்கள், கண் புருவங்களை மழிப்பவர்கள், அழகுக்காக பற்களை தீட்டி கூர்மையாக்கி அவற்றில்

இடைவெளி ஏற்படுத்துபவர்கள் ஆகியோரையும் இவ்வாறான அலங்கார வேலைகளில் ஈடுபடுவோரையும் நபியவர்கள் சபித்ததாக இப்னு மஸ்ஊத் ரழியல்லாஹுஅன்ஹுஅவர்கள் குறிப்பிடுகிறார்கள் (புஹாரி, முஸ்லிம்). மேலும் நபியவர்கள் மற்றுமொரு சந்தர்ப்பத்தில் பொய் முடி வைப்பவர்களையும் இவ்வேலையில் ஈடுபடுவோரையும் சபித்தார்கள் (புஹாரி, முஸ்லிம்). எனவே, கண் புருவங்களை மழித்து அலங்காரம் செய்யும் பெண்கள் அல்லாஹ்வையும் அவனது விசாரணையையும் நபியவர்களின் சாபத்தையும் அஞ்சி அதிலிருந்து விலகிக்கொள்வார்களாக.

**ஐயம் :** திருமண சடங்குகளை மாற்று மதத்தினர் தமது கோயில்கள் மற்றும் பல இடங்களில் நடத்தி வருகின்றனர். ஆனால், முஸ்லிம்களின் திருமணங்கள் பள்ளிவாயல், மணமகன் இல்லம், திருமண மண்டபம் போன்றவற்றில் நடத்தப்படுகின்றன. எந்த இடங்களில் நடத்துவது இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது?

**மு. உ. ஆப்தீன். பிரதான வீதி. ஏறாவூர் 02A**

**தெளிவு :** திருமணம் என்பது இஸ்லாம் வலியுறுத்துகின்ற மிக முக்கியமான ஒரு கடமையாகும். நபியவர்கள் ஒரு ஹதீஸின் தொடரிலே கூறினார்கள்: 'நான் பெண்களைத் திருமணம் செய்திருக்கிறேன். (எனது இவ்வழிமுறையை) யார் புறக்கணிக்கிறாரோ அவர் என்னைச் சேர்ந்தவரல்ல' (புஹாரி, முஸ்லிம்). இது போன்ற இன்னும் ஏராளமான ஹதீஸ்கள் திருமணத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றன.

திருமணம் நடத்தும் இடத்தைப் பொறுத்தவரை பள்ளிவாசலில்தான் நடத்த வேண்டும் என்று இஸ்லாம் வலியுறுத்தவில்லை. பொருத்தமான, வசதியான இடங்களில் திருமணங்களை இஸ்லாம் கூறிய முறைப்பிரகாரம் நடத்துவதற்கு மார்க்கம் அனுமதித்திருக்கிறது. பள்ளிவாசலில் திருமணத்தை நடத்துவது ஸுன்னத் என்று சிலர் குறிப்பிட்டு, அதற்கு ஆதாரமாக 'திருமணத்தை பள்ளிவாசல்களில் வைத்துக்கொள்ளுங்கள்' என்ற ஹதீஸையும் சுட்டிக்காட்டுவர். இந்த ஹதீஸ் பின்வருமாறு பல ஹதீஸ் நூல்களில் இடம்பெறுகிறது. அதாவது நபியவர்கள் கூறினார்கள்: 'திருமணத்தை பகிரங்கப்படுத்துங்கள், அதை பள்ளிவாசல்களில் வைத்துக்கொள்ளுங்கள்' (திர்மிதி, பைஹகீ).

ஆயினும் இந்த ஹதீஸை ஆய்வுசெய்த ஹதீஸ் கலை ஆய்வாளர்கள் இந்த ஹதீஸின் முதல் பகுதியான 'திருமணத்தை பகிரங்கப்படுத்துங்கள்' என்ற வாசகம் மட்டுமே ஆதாரபூர்வமானதாகும், அதன் பிற்பகுதியான 'அதை பள்ளிவாசல்களில் வைத்துக்கொள்ளுங்கள்' என்ற வாசகம் பலவீனமானது என்றும் இந்த ஹதீஸை அறிவிக்கும் அறிவிப்பாளர்களுள் ஒருவரான ஈஸா இப்னு மைமூன் என்பவர் பலவீனமானவர் என்றும் இமாம் திர்மிதி, இமாம் பைஹகீ, ஹாபிழ் இப்னு ஹஜர் ஆகியோர் குறிப்பிடும் அதே நேரம், இமாம் இப்னு ஹிப்பான் போன்ற மற்றும் பல ஹதீஸ் கலை ஆய்வாளர்கள் ஈஸா இப்னு மைமூன் என்ற ஹதீஸ் அறிவிப்பாளர் ஹதீஸ்களை பொய்யாக இட்டுக்கட்டுபவர் என்றும் குறிப்பிடுகின்றனர்.

இதன் அடிப்படையில் பள்ளிவாயல்களில் திருமணத்தை நடத்துவது ஸுன்னத் என்ற கருத்து பலவீனமானது என்பது தெளிவாகிறது. ஆயினும் பள்ளிவாசல்களில் நடத்துவது கூடாது என்பதல்ல. வீடுகளிலோ, வேறு இடங்களிலோ திருமணம் நடத்துவது ஆகும் என்பதைப் போலவே பள்ளிவாசல்களில் நடத்துவதும் ஆகுமானதாகும். வீண் விரயத்தை தவிர்த்தல், சிறந்த சூழல் போன்ற காரணங்களுக்காக பள்ளிவாயல்களை தேர்ந்தெடுப்பது நல்லது என்று கூறினால் அதில் தவறில்லை. ஆயினும் பள்ளிவாயல்களில் திருமணத்தை நடத்துவதுதான் ஸுன்னத் என்ற கருத்தே ஆதாரமற்றதாகும்.

திருமண மண்டபங்களில் திருமணத்தை நடத்துவதிலும் தவறில்லை. ஆயினும் அங்கு ஆண் - பெண் கலப்பு, இசை போன்ற ஹறாமான காரியங்கள் அரங்கேறிவிடாமல் அவதானமாக இருக்க வேண்டும். இத்தகைய ஹறாமான செயல்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புகள் அதிகம் காணப்பட்டால் திருமண மண்டபங்களைத் தவிர்த்து விட வேண்டும். அல்லாஹ் மிகவும் அறிந்தவன்.

## புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான பாராட்டு வைபவம்

இவ்வருடம் நடைபெற்ற 5ம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த ஏறாவூரைச் சேர்ந்த மாணவர்களைப் பாராட்டி பரிசு வழங்கும் வைபவம் ஒன்றை ஏறாவூர் தவ்ஹீத் ஜமாஅத் இன்ஷா அல்லாஹ் விரைவில் நடாத்துவதற்கு தீர்மானித்துள்ளது.

இதற்காக சித்தியடைந்த மாணவர்களின் விபரங்களைத் திரட்டல், மாணவர்களின் விபரங்களைக் கொண்ட சஞ்சிகை வெளியிடல் ஆகிய முன்னேற்பாடுகள் நடைபெற்று வருவதாக இவ்வைபவ ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர்.


**Do Your Computer Repairing Home Coming!**

Save our contact in your mobile and feel free to call us if you face any computer troubleshooting issues.
We are always be there to help you on
077 2300420

**Services**

01. Computer Formatting
02. Backups and Restores
03. Drivers and Updates
04. Software installations
05. Hardware Troubleshooting
06. Any Computer Related Issues

To have Free advices and instructions when your Computer (Desktop or Laptop) gets any troubles !

Feel Free to Call
0759600421

**மாதம் தோறும் புத்தகப்பரிசை வழங்குவோர்:**

ஏறாவூர் மணிக்கூட்டுக் கோபுர
சந்தியில் அமைந்துள்ள,

**யூரோ போன் வேர்ல்ட்,**

**இல.17, பிரதான வீதி, ஏறாவூர்**

Mobile: 077 8777774
Fax: 065 2240283

மட்டக்களப்பு - கொழும்பு சொகுசு பஸ் சேவை (குளிரூட்டப்பட்ட) ஆசனம் இங்கு பதிவு செய்யப்படும்.


## ஐயமும் தெளிவும்

மார்க்கம் தொடர்பான உங்கள் கேள்விகளையும் ஐயங்களையும் எழுதி அனுப்புங்கள். அல்குர்ஆன், ஆதாரபூர்வமான ஹதீஸ்களின் அடிப்படையில் அவற்றுக்கு பதில் அளிக்கப்படும். கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி

தவ்ஹீத் ஜமாஅத்,த.பெ. இல: 02, ஏறாவூர்


**CGS** College for Tech Studies

**Computer for Global System**

**Provides Professional Courses and Training on**

- Certificate in Computer Application
- Certificate in Professional Computer Basic
- Application Packages
- Certificate in Computer Hardware
- Certificate in Computer Networking and Administration
- Certificate in Advertising and Graphic Designing
- Diploma in English
- Auto CAD
- 3D Max

**Registration on Progress**

**CLASSES TO BE STARTED ON 2ND OF JANUARY 2012**

Visit or Call 077 2300420/075 9900421

Inash Building (Near Jamiul Akbar Jummah Masjid),
Second Floor, Kadduppalli Road, Eravur
Tel: +94772300420 , +94759900421
Email: cgsystem@cgs.lk Web: www.cgs.lk


## பெறுமதியான புத்தகப் பரிசை வென்று தரும் ஏழு கேள்விகள்

1. ஒரு சமூகத்தில் விபசாரம் பகிரங்கமாக நடைபெற்றால் ஏற்படும் இரு சோதனைகளாக நபியவர்கள் எவற்றைக் குறிப்பிட்டார்கள்?
2. அஜ்னபி என்ற சொல் யாரைக் குறிக்கிறது?
3. தொழுகையில் வைக்கப்படும் தடுப்பு என்பதற்கு அறபு மொழியில் பாவிக்கப்படும் சொல் யாது?
4. மார்க்கத்தில் கற்பதற்கு தடைசெய்யப்பட்ட துறைகள் எவை?
5. வீண் விரயம் செய்வது ஷைத்தானின் செயல் என்று கூறும் வசனம் எந்த ஸூறாவில் இடம்பெறுகிறது?
6. கண் புருவங்களை மழிப்போர் பற்றி நபியவர்களின் ஹதீஸில் கூறப்படுவது யாது?
7. அண்மையில் இலங்கைக்கு ஒரு அறபு நாட்டின் பிரதமர் விஜயம் செய்தார். அந்த அறபு நாடு எது?

இக் கேள்விகளுக்கான விடைகளை இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் **10.01.2012** க்கு முன்னர் எழுதி அனுப்புங்கள். சரியான விடைகளை எழுதுவோரில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறுவோருக்கு பெறுமதியான புத்தகப் பரிசு வழங்கப்படும். ஏனைய ஐவரின் பெயர்கள் அடுத்த இதழில் வெளியிடப்படும். விடைகளை எழுதி அனுப்ப வேண்டிய முகவரி : **தவ்ஹீத் ஜமாஅத், த.பெ.இல. 02, ஏறாவூர்.**

### கடந்த மாத இதழில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு சரியான பதில்களை எழுதி வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்பட்டோர்:

**1ம் இடம் : AAF.ஹியாஸா, 358A, காதியார் வீதி,ஏறாவூர் 06D**

**2ம் இடம் : MHF. ரிபாஸா, கிராம கோர்ட் வீதி, ஏறாவூர் 06A**

**3ம் இடம் : KM. அஸ்வர், 199, காட்டுப்பள்ளி புதிய வீதி, ஏறாவூர் 02**

**பாராட்டைப் பெறும் ஐவர்:**

1. NL. அஸ்மியா, 139, முனையவளவு வீதி, ஏறாவூர் 06A
2. ARF. இஹ்திஸா, 39/4, காதியார் வீதி, ஏறாவூர் 06
3. UL. ஸிறாஜுதீன், 182, முகாந்திரம் வீதி, ஏறாவூர் 06A
4. AF. றிஸ்னா, 310, முகாந்திரம் வீதி, ஏறாவூர்
5. AR. அப்றார் அஹ்மத், 194, ஜிப்ரி தைக்கா வீதி, ஏறாவூர் 03

### கடந்த மாத இதழில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கான விடைகள் :

1. முஹர்ரம்
2. வத்து / ஸுவா∴ / யகூத்
3. லா ப(b)∴ஸ தஹூருன் இன்ஷா அல்லாஹ்
4. 7 பில்லியன் / 700 கோடி
5. நாசமடையட்டும்
6. நபியைப் பின்பற்றுவதும் தொழுகையைக் கற்றுக்கொள்வதும்
7. மாலைதீவு